www.tamilarangam.net

# சிந்தனை

தை 1989

உங்களுக்கு தெரியுமோ
என்னவோ
நமது அருமை நண்பர்கள்
பலரை இழந்தோம்
எப்படி என்று நான்
எப்படி சொல்ல
என்றாலும்
'வெற்றிடங்களை இயற்கை
விரும்புவதில்லை'
என்பதை நீங்கள் அறிந்ததே
இறுதி வரையில்
நாம் வழி தொடர்வோம்.....

சேரனின் கவிதையில் கருத்து –

SINTHANAI 1/89 Jan/Feb 1989

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தோழர் எம்.சி. சுப்பிரமணியத்திற்கு எமது அஞ்சலிகள்

தமிழ் மக்களின் சாபக்கேடான சாதிமுறையை வெறும் சீர்திருத்தவாதத்தினால் மாற்றமுடியாதென்பதை உணர்ந்து வர்க்கப்போராட்டத்திற்கும் சமூகமாற்றத்திற்கும் தான் தேர்ந்த கொண்டஇயக்கத்தில் இறுதிவரை உழைத்த தோழர் எம். சி. சுப்பிரமணியம் மறைந்து விட்டார். அவருக்கு எமது அஞ்சலிகள்.

ஆசிரியர்குழு



தோழர் அண்ணாமலை

மக்கள் மத்தியில் உண்மையாகவும் நேர்மையாகவும் தான் ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்கமைய அரசியல் செய்த தோழர் அண்ணாமலையை அராஜகம் பலிகொண்டுவிட்டது. தேசியஇனவிடுதலை, தேசியஒருமைப்பாடு, வர்க்கப்போராட்டம் ஆகியவற்றில் உறுதியான நிலைப்பாடும் செயற்பாடும் அவருடைய அரசியல் வாழ்க்கையாக அமைந்திருந்தது. சட்டத்தரணியான அவர் கறுப்புக் கோட்டுடன் பணம்சேர்க்கும் வக்கீலாக வாழாமல் நவசமசமாஜக்கட்சியின் முழுநேர ஊழியராக உழைத்தார். இளைஞர்களுக்கு சித்தாந்

www.tamilarangam.net

தவகுப்புக்கள் நடத்துவதுடன் அவர்களுடன் பசைவாளியுடன்
போஸ்டர் ஒட்டச் சென்று பலமுறை போலிஸ்நிலயங்களில்
இரவைக்கழித்தார். தொழிற்சங்க ஐக்கிய முன்னணிகள், இட
துசாரி முன்னணிகள், இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவ
த்திற்குமான இயக்கம் ஆகிய சகல வெகுஜன அமைப்புக்க
ளிலும் அவர் பங்கு இருந்தது. அவர் செய்த குற்றம் மக்க
ள் மத்தியில் அரசியல் செய்ததுதான். அவர் ஆயுதவெறி
கொண்டு அலையவில்லை. ஆனல் ஆயுதம் அவரைப்பலிகொண்
டுவிட்டது.

அநீதிகள் வென்றதாகவோ அல்லது அராஜகம் ஆட்சிபீடம்
ஏறியதாகவோ வரலாறு இல்லை. இன்று தங்களின் தோலி
களைக்கப்பாற்றுவதற்காக அதற்குத் துணை போகின்றவ
ர்கள் அதற்குப் பலியாவது மட்டுமல்ல மக்களிடமிருந்து
அந்நியப்பட்டும் விடுவார்கள்.

தோழர் அண்ணாமலையின் மறைவு சகல முற்போக்குவாதி
களுக்கும் மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்.

ஒரு உண்மை பாட்டாளிவர்க்கத்தின் தோழனுக்கு எமது
அஞ்சலிகள்.

ஆசிரியர்குழு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை



## ஆசிரியர் கருத்து

பத்து ஆண்டுகளுக்குப் பின் இலங்கை மக்கள் ஒரு பொதுத்
தேர்தலை பெப்ரவரி மாதம் 15ம் திகதி சந்திக்கப்
போகின்றார்கள். மக்களின் உணர்வுகளையும் அவர்களின் வரு
ங்கால அரசியலையும் கருத்தில் கொள்ளாது "இவைவெறு
ம் கதிரைகளுக்கான போட்டி" என ஏட்டுச்சுரக்காய் இட
துசாரிகளைப் போல் அலட்சியப்படுத்தாது இன்றுள்ள யதா
ர்த்தமான அரசியல் நிலைமைகளில் வெகுஜனங்கள் என்ன
செய்ய வேண்டுமென்பதை ஆராய்வதே எமது நோக்கமா
கும்.

கடந்த 40 ஆண்டு காலமாக மாறி மாறி ஆட்சிக்கட்டில்
ஏறிய, ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்
சியும் சாதாரணமான மக்களுக்கு சுபீட்சமான வாழ்க்கை
யை ஏற்படுத்தக்கூடிய செயற்திட்டங்கள் எவற்றையும் பூர
ணமாக நிறைவேற்றவில்லை. ஏழைத்தொழிலாள விவசாய
மக்களைச் சுரண்டுவதனால் ஏற்படும் இலாபத்திலே சுக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகங்களை அனுபவித்துக் கொண்டிருந்த ஆளும் வர்க்கங்களின் நலன்களில் என்றும் அக்கறை கொண்டிருந்த இந்தக் கட்சிகளினால் சுரண்டப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை.

நேரடி ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுபட்ட பல நாடுகளிலேற்பட்டது போல ராணுவ சர்வாதிகார ஆட்சி இலங்கையில் ஏற்படாததினால் முதலாளித்துவத்தின் கீழ் மக்கள் அனுபவிக்கும் குறைந்தபட்ச ஜனநாயக நடவடிக்கையான பொதுத்தேர்தலை இந்தக்கட்சிகள் மீண்டும் மீண்டும் சந்திக்க வேண்டியேற்பட்டது. அதே சமயம் நிலப்பிரபுத்துவத்தின் எச்சசொச்சங்களிலிருந்து இன்னமும் மீளாமல் இருந்த மக்கள் முதலாளித்துவ ஜனநாயகத்தேர்தல்களை தமது நலன்களுக்காகப் பாவிக்கும் திராணியற்றவர்களாகவும் இருந்தார்கள். மக்கள் மத்தியில் ஊறியிருந்த மதப்பற்று, சாதி அமைப்பு, அன்றாட வாழ்க்கைக்கு உயர்சாதி நிலஉடமையாளர்களிடம் தங்கியிருக்க வேண்டிய கிராமியப்பொருளாதாரம், சமூகப்படிகளில் ஏறமுயலும் முதுகெலும்பற்ற நடுத்தர வர்க்கத்தினரின் 'செல்வக்குவிப்பே வாழ்க்கை' என்ற சித்தாந்தம், இப்பலவீனங்களையெல்லாம் ஆளும் வர்க்கங்கள் தேர்தல் காலங்களில் தமது வெற்றிக்காகப் பாவித்தன. குடும்ப அரசியல், தனிநபர் வழிபாடு, சாதிவழிப்பிரிவு, பிரதேச இன மத வெறி இவையெல்லாம் அரசியலாக மக்களுக்கு ஊட்டப்பட்டன. இந்த மாயையில் கட்டுண்ட மக்களின்

www.tamilarangam.net

வாக்குரிமைப் பலத்தினால் அரசாங்கங்கள் அமைக்கப்பட்டன. இந்தவகையான அரசியலை யார் திறமையாகச் செய்தாரோ, அவர்கள் மக்களின் தலைவர்கள் எனமுடிசூட்டப்பட்டார்கள். சிங்களப் பேரினவாதத்திற்கும் தமிழ் வகுப்புவாதத்திற்கும் வாய்ப்பந்தல் போட்டவர்கள், "கொய்கம-வெள்ளாளக் கூட்டு" என்ற முறையில் ஆட்சிபீடமேறினார்கள். சாதிரீதியாகவும், புத்த, கிறிஸ்தவ மடலாயங்களைச் சேர்ந்தவர்களுக்கும், மேல்மட்டப்பாடசாலைகளில் படித்தவர்களுக்கும் விசேட சலுகைகளைச் செய்து தமது அரசாங்கங்களை ஸ்திரமாக்கிக் கொண்டார்கள்.

40 வருட காலம் ஆட்சிசெய்தவர்கள் கிராமிய மட்டங்களில் நிலவிய நிலப்பிரபுத்துவப் பொருளாதார சமூக அமைப்பு முறைகளை மாற்றியமைக்கவோ அல்லது அந்த மக்கள் நிரந்தரமான வறுமையற்ற வாழ்க்கையை வாழ்வதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவோ முயலவில்லை. இதற்குக் காரணம் இந்தப் பிற்போக்குத்தன்மையே அவர்களுடைய ஆட்சியை நிலைநிறுத்துவதற்கான தளமாகவும் விளங்கியதேயாகும். இவற்றிற்குப் பதிலாக கள்ளக்கடத்தல்காரர்களையும், கறுப்புபணமுதலாளிகளையும் சமூகவிரோதிகளையும் தமது ஆட்சித்தூண்களாக வளர்த்தனர். நாட்டின் மூலவளங்களும் மக்களின் உழைப்புச்சக்தியும் ஒரு சிறு கூட்டத்தினரின் நலன்களுக்காக விரயமாக்கப்பட்டன. ஏழைகள் மேலும் ஏழைகளாக்கிக் கொண்டிருந்தனர்.

www.tamilarangam.net

சுரண்டிக் கொழுத்த சிங்கள தமிழ் முதலாளிகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கிய பொழுதுதான் அவர்கள் அதனை மக்களின் முரண்பாடுகளாக மாற்றி நாட்டையே இரத்தக் காடாக்கினர். ஆளும் வர்க்கத்தினரின் இலாபத்திற்காக தமது வியர்வையைச் சிந்திய மக்கள் அவர்களின் முரண்பாடுகளுக்காக தமது இரத்தத்தையும் சிந்தினார்கள். அவசரகாலச் சட்டங்களுடன் கூடிய ராணுவ ஒடுக்கு முறையினால் மக்களின் உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டன. தொழிற் சங்கங்கள், மற்றும் மக்கள் அமைப்புக்கள் படிப்படியாகச் சீரழிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. மக்களுக்கிருந்த வாக்குரிமை கூட சட்டரீதியான தில்லுமுல்லுகளால் பயற்றவையாக்கப்பட்டன. எதிர்ப்புக்களை அடக்குவதற்கு கட்டுப்பாடற்ற வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. சிங்கள முதலாளித்துவம் தனது ராணுவ ஒடுக்கு முறையை நாடு முழுவதும் அமுல் நடத்தியது.

தமிழ் முதலாளித்துவத்தின் பாரம்பரியத்தலைமைகள் பாராளுமன்றத்திலிருந்து அகற்றப்பட்ட பின்பு, தமிழ் தேசிய முதலாளிகள், ஒடுக்கு முறைக்கெதிராக ஆயுதமேந்திய இளைஞர் குழுக்களை தமது பாதுகாப்பிற்கும் வர்க்கநலன்களுக்கேற்பவும் வளர்க்கத் தலைப்பட்டனர்.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் மக்களின் சகல வர்க்கங்களிலுமுள்ள இளைஞர்கள் ஆயுதமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலவுவது தவிர்க்க முடியாததொன்றாகிய போது வெறும் தேசவிடுதலைக்கான கோசம். சமூகமாற்றத்திற்கான கோசமாக பரிணாமவளர்ச்சியடைவது தவிர்க்க முடியாது. சாதியம், உயர்சாதி, செல்வம் என்ற அடிப்படையில் செம்மைப்பட்ட தமிழ்மக்களின் அரசியல், ஆயுதப்போராட்டத்தினை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ளவர்களும் பங்குகொள்ளும் அரசியலாக மாற்றியது. இந்த வளர்ச்சியினால் தமிழ் ஆளும் வர்க்கங்கள் கலக்கமடைந்தன. அவர்களின் இலண்டன், அமெரிக்க ஆலோசகர்கள் வெகுண்டெழுந்தனர். ஆளும்வர்க்கங்களின்நலன்களைப் பேணக்கூடிய இயக்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டன. மற்றவர்களை கொன்றொழிக்கும்படி கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. இயக்கத்தலைவர்களும் நூற்றுக்கணக்கான இளைஞர்களும் கொல்லப்பட்டார்கள். பல மேல் நாட்டு விமர்சகர்கள் அப்போது பால்குடிக்கும் பூனைகளாக இருந்தார்கள். ஆயுதபீதியால் மக்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்தார்கள். தமிழ் மக்களின் புதிய தலைமை உருவாகிவிட்டது என்று ஆளும்வர்க்கங்கள் பிரகடனம்செய்தன. சில சந்தர்ப்பவாதிகளும் ஒத்து ஊதினார்கள்.

நீண்டகால குழப்பநிலைமைகளை எந்த முதலாளிகளும் விரும்புவதில்லை. சமாதான காலத்தில் இலாபத்தை உருவாக்குவதற்கும் குவிப்பதற்குமான போட்டி. போட்டியில் ஏற்படும் முரண்பாடுகளினால் ஏற்படுவது குழப்பம். குழப்ப நிலைமை

www.tamilarangam.net

களில் இலாபங்கள் குறையும் பொழுது முதலாளித்துவம் சமாதானத்தை வேண்டி நிற்கின்றது. சமாதான காலத்தில் வியர்வை சிந்தி உழைப்பவர்கள் குழப்ப நிலைமைகளில் முத லாளிகளுக்காக இரத்தம் சிந்தி மடிகின்றார்கள்.

இந்தச் சூழ்நிலையில் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும் உழைக்கும் மக்களின் அணிகளைப் பலப்படுத்தவும் கிடைக் கும் ஒரு சந்தர்ப்பமாகவும் சமாதான காலத்தை பாவிக் க மக்கள் விரும்புகின்றார்கள். விடுதலைப் போராட்டத்தி ல் போது முன்னுக்கு வந்த இடதுசாரி சக்திகள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுவதையும், மக்கள் தமது அபி ப்பிராயங்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதையும் பிற்போக்குவாதிகளும் அராஜகக்கும்பல்களும் வெறுக்கின்றன. இதுவே இன்று தமிழ்ப்பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் சமாத தானத்திற்கும் அதற்கெதிரான அராஜக நடவடிக்கைகளுக் குமான காரணமாகும்.

## தமிழ்பேசும் மக்களும் தேர்தல்களும்

கடந்த ஐந்து ஆண்டுகளாக அரசபயங்கரவாதத்திலும் அராஜகத்திலும் ஊமைகளாக்கப்பட்டுவந்த பொதுமக்கள் தமது அபிப்பிராயங்களை வெளியிட விரும்புகின்றார்கள் என் பதை நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்களும் ஜனாதி பதி தேர்தலும் எடுத்துக் காட்டியுள்ளன; 60%க்கும் மேலான மக்கள் வாக்களித்த இந்தத் தேர்தல்களைப்

www.tamilarangam.net

பலர் கண்டும் காணாதவர்களாகவே இருக்கின்றார்கள். மாகாணசபைத்தேர்தல்களில் கிழக்கிலங்கையில் இந்தியப் படையினர் அடையாளஅட்டைகளை எடுத்துச் சென்றதாலும் அவர்களின் நெருக்குவாரத்தினாலுமே மக்கள் வாக்களித்தார்கள் என்று கதைகளையும் உலாவவிட்டிருக்கின்றார்கள். ஆனல் உண்மையான நிலைமையினை வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஜனாதிபதித் தேர்தலில் பங்குகொண்ட தமிழ்ப்பேசும் மக்கள் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்கள். இந்த தேர்தலைக் கண்காணிக்க "சார்க" குழுவினர்கள், வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிங்கள ஜனாதிபதி அபேட்சகர்களின் பிரதிநிதிகள் வாக்குச்சாவடிகளில் பிரசன்னமாக இல்லாதிருந்தும். கூட மக்கள் சுயமாக வந்து வாக்களித்தார்கள், எனக்கூறியுள்ளார்கள். சிங்கள அபேட்சகர்களுக்கு 5 இலட்சம்மக்கள் சுயமாக வந்து வாக்களித்த வடக்குகிழக்கு மாகாணத்தில் விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்ட இயக்கங்களின் பிரதிநிதிகளுக்கு வாக்களிப்பதற்கு மட்டும் மக்கள் தயக்கம் காட்டுகிறார்கள் என்று கதையளப்பவர்களின் அரசியல் உள் நோக்கங்களை எம்மால் புரிந்து கொள்ளமுடிகின்றது.

இவ்வாறு விமர்சனங்கள் செய்த பலர் இன்று பெயர்மாற்றங்களுடனும் சுயேச்சைகளாகவும் துணிவுடன் மக்கள் அபிப்பிராயத்தைப் பெற முன்வந்திருப்பது வரவேற்கப்படவேண்டும்.

www.tamilarangam.net

வடக்குகிழக்கு மாகாணத்தில் இன்று ஏற்பட்டுவரும் சுமுகம
மான சூழ்நிலைமைகளை பிரதேச மக்களின் புனர்வாழ்வுக்
கும் ஜனநாயகரீதியான மக்கள் அணிகளை உருவாக்குவதற்
கும் அரசியலமைப்புக்கள் பயன் படுத்த வேண்டும்.
அராஜகத்தின் கைகள் இன்னும் ஓய்ந்து விடவில்லை என்ப
தை தோழர் அன்னமலையின் கொலை எமக்கு வலியுறுத்தி
க்கொண்டிருக்கின்றது. மக்கள் பங்குகொள்ளும் ஆகக்குறைந்
த ஜனநாயகத்திற்கும் மக்களை நிரந்தர அடிமைகளாக்கும்
அராஜகத்திற்குமிடையிலான போட்டியே தமிழ்பேசும் மக்
கள் சந்திக்கும் இந்தத் தேர்தலாகும். அராஜகத்திற்கு
அரசியல் ரீதியாக முற்றுப்புள்ளி வைப்பதற்கும், திசைமாறி
ச் செல்பவர்களைத் திருத்தி மக்கள் அரசியலுக்குக்
கொண்டுவரவும் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலைப் பாவி
க்க வேண்டும்.

## ஐக்கிய சோசலிச முன்னணி.

இந்தத் தேர்தல்கள் மக்களின் பிரச்சனைகளுக்கு எந்தவித
மான தீர்வுகளையும் ஏற்படுத்தப்போவதாக நாம் நம்ப
வில்லை. ஆனல் தேர்தல் காலங்களில் மக்கள் அரசியலில்
அக்கறை காட்டுகின்றார்கள். பங்குகொள்ளுகின்றார்கள். இந்த
நிலைமைகளை இடதுசாரிகள் முழுமையாகப் பாவிக்க வேண்
டியது அவசியமாகும். முதலாளித்துவப் பாராளுமன்றங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலம் புரட்சிகரமான அரசாங்கங்களை அமைக்க முடியா ததான், ஆனால் அதை ஒரு பிரசார மேடையாக்குவது அவசியமாகும்.

நாடுபரந்து நடைபெறும் இந்தத் தேர்தலில் இனவொடுக்கு முறைக்கும் அராஜகத்திற்கும் துணைபோன முதலாளித்துவக் கட்சிகளை ஒதுக்கித் தள்ள வேண்டியது அவசியமாகும். ஆனால் சிங்கள தொழிலாள விவசாய மக்கள் மட்டுமல்ல மலையகத் தொழிலாளர்களும் இன்று முதலாளித்துவக் கட்சிகளின் பின் செல்வதுதான் இந்த நாட்டின் துர்ப்பாக்கிய நிலையாக இருக்கின்றது. இந்த மக்களை வலதுசாரித்தலைமைகளிடமிருந்து பிரித்து ஒரு இடதுசாரி அணிக்குள் கொண்டுவருவதுதான் இன்றைய முதற்கடமையாக உள்ளது.

இந்த நிலைமைகளிலேயே சகல தொழிலாள விவசாய மக்களையும் வெகுஜனங்களையும் ஐக்கிய சோசலிசமுன்னணியின் அணிகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று பிரசாரம் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

'சிந்தனை' யில் வெளியாகும் கதைகள், கட்டுரைகள் ஆகியவற்றில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள், அவற்றின் ஆக்கதாரர்களின் கருத்துக்களேயாகும். அவை 'சிந்தனை' ஆசிரிய குழுவின் கருத்துக்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேற்றிருந்தோம்

— செல்வம்

பெற்றதாயும்
பிறந்த பொன்னாடும்
எங்கோ நெடுந் தொலைவிலிருக்க -
இங்கேயோர் குளிரிரவில்
இருப்பிழந்த அகதிமகன்
ஓங்கிக் குரலெடுத்து
நேற்றிருந்த கதை சொல்லவந்தேன்.

காத்திருந்து காத்திருந்து
துன்பக் காலங்கள் போகவில்லை.
இலை உதிர்ந்து சருகாகி
சருகழிந்து எருவாகி
மரம் துளிர்த்து செழித்து
காலங்கள் மாறுது - எங்கள்
துன்பக் காயங்கள் மாறவில்லை.

நேற்றிருந்தோம்
எங்கள் வீட்டினிலே
இன்று அலைகின்றோம்
அந்நியரின் தெருக்களிலே -
நேற்றிருந்த அந்த வாழ்வினிலே
எப்படித்தான் நாம் இருந்தோம்.

இன்பத் தமிழுக்கு அமுதென்று பெயர் - இப்போ
தமிழர் எங்களுக்கு அகதியெனப் பெயர்.
சங்கம் வளர்த்த தமிழன்
சங்கங்களின் சந்தாக்காரனானான்.
மாடுகட்டி போரடித்தால்
மாளாது செந் நெல் என
யானை கட்டிப் போரடிக்கும்
தென்மதுரைச் சீமையென்பார்.

www.tamilarangam.net

தென் மதுரைச் சீமையில் தான்
திருநெல் வேலியும்
இராமநாதபுரமும்.
இங்கிருந்து தான்
பஞ்சம் பிழைக்க
படைநடப்பு நடந்து வந்தார்
தென்னகத்து பைந்தமிழர்.

வெள்ளைத்துரையும்
கறுப்புக் கங்காணியும்
கடாரம் வென்ற தமிழனுக்கு
காதில பூச்சுத்தி
கடல் கடக்க வழிசமைச்சார்
அட்டைக் கடி நடையும்
அரைவயிறுப் பட்டினியுமாய்
கண்டிச் சீமைக்கு
பசி தீர்க்கும்
கனவைச் சுமந்து வந்தார்.
சங்கம் வளர்த்த தமிழன்
சங்கங்களுக்கு சந்தாக்காரனானன்.

மலையைப் பார்த்தால்
மண்மகளின் முலைகளைப் போல்
மலைகளின் மைந்தர்கள்
எம் தமிழர்
பட்டினியால் பிச்சையெடுத்தார்
காவேரி நதியோரத்தில் பிறந்தவன்
காலத்தால் அகதியாகி
மாவலி நதியோரம்
வீணுக்குழைத்தழிந்தான் -

கல்வாரிக் கொடுமை
கண்டி மலைகளில் நடக்க
மௌனித்திருந்தது ஈழத்தின் மறுபகுதி-
மௌனத்தை மொழிபெயர்க்கும்
வித்தகர்கள் அன்றிருந்தால்
அகதித் தமிழன்
உலகில் இன்றில்லை.

www.tamilarangam.net

மூன்று கடல் சூழும்
மூன்று தமிழ் வாழும்
என்னருமை யாழ்ப்பாணம்.
நிச்சாமமும்
குருநகரும்
கொடிகாமத்தின் நெடிய வீதிகளும்
சாதிப் பேயடித்து
இரத்த வாந்தியெடுத்தது
அந்நாளில.

இன்று,
ஒத்திவைக்கப்பட்டுள்ள
சாதிப் பிளவுகள்
நல்ல சகுனம் கேட்குது
மீண்டும் ஒருமுறை ஆள்வதற்கு
என்னருமை யாழ்ப்பாணமே!

தரப்படுத்தல் -
சிங்களத்து அரசும்
மனமிரங்கும்
மன்னார் வன்னியென -
யாழ்ப்பாணமே
அங்கு பரீட்சை எழுதும்
என்னருமை யாழ்ப்பாணமே !

தொழில் நுட்பக்காலம் நகர்ந்து
மின் - அணு - பௌதீகக் காலம்
உலகை வெல்லும்
நாமோ -
கிடுகு வேலிக்கு போட்ட கிழுவை
உனக்கோ எனக்கோ?
புகக்கணக்கில்
காலத்தைக் கொல்வோம்
என்னருமை யாழ்ப்பாணமே !

இப்படித்தான் நேற்றிருந்தோம்
இப்படித்தான் நேற்று அங்கிருந்தோம்
யாழ்ப்பாணத்தை பெயர்த்துக் கொண்டு

www.tamilarangam.net

யாழ்ப்பாணத்தையே போர்த்திக் கொண்டு
தப்பி வந்தவர் ஒருபாதி
தற்செயலாக வந்தவர் ஒருபாதி
செயின் ஆற்றங்கரைகளிலே
நாம் நிறைந்தோம்.

வட கோடியுயர்ந்தால் என்ன
தென் கோடி சாய்ந்தால் என்ன
தாய்ப் பூமி
துன்பக் கடலுக்குள் அமிழ்ந்தால் என்ன
அகதிக் ''காட்'' டுண்டு
காரு வீடும் வேண்டும்.
கனவுண்டு
ஐயோ தமிழா.
சிங்களத்து துப்பாக்கிக்கு பயந்து
ஏவுகணைப் பின்னலுக்குள் சிக்குண்டாய்

எருதுகள் படுக்க விரும்புவதுண்டு
எசமான்கள் விரும்புவதில்லை.
யூதருக்கு நடந்த கதை
எங்களுக்கும் உண்டு.
சரித்திரம் சொல்லும் சாட்சியும் அதுதான்
சந்ததிக்கு நல்லது செய்யும்
மார்க்கத்தையறியோம்.

பருத்தித்துறை தொடங்கி பதுளை வரை
மன்னார் தொடங்கி மட்டுநகர் வரை
பொத்திவில் உட்பட்ட பிரதேசமெங்கும்
தனித்தனியாகவும் இயக்கங்களாகவும்
எங்கள் இருப்பினை உறுதிசெய்யும்
எங்கள் சந்தோசக் காரணங்கள்
எம் தேச மக்கள்
சிலுவைகள் தாங்கி முள்முடிதரிக்கின்றார்.
இரவு பகல் விழித்திருந்து
இன்னல்களைத் தான் ஏற்று
மக்களைக் காக்க மரணத்தைவெல்ல
நேற்றுப் பிறந்தவனே! இங்கிருந்து
உன்னை வணங்குகின்றோம்.

www.tamilarangam.net

செவ்வரத்தை பூ மறந்தோம்
செவ்விளநீர் நிறம் மறந்தோம்
என்னத்தைத்தான் நினைந்தோம்
சேரனே ! ஜெயபாலனே !

ஈழத்துக் கவிஞர்களே !
நினைவை விட்டு அகலாததெல்லாம்
உங்கள் உயர் தமிழ்க் கவிதைகள் தாம்.

பகைவன் அகலும் பகல் நெருங்கவேண்டும்.
பருத்தித்துறையிலும் அடிவாங்கி
பதுளையிலும் அடிவாங்கி
பகைவன் அகலும் பகல் நெருங்கவேண்டும்.
நேற்றிருந்த இருள் அகன்று
புத்தம் புதுச் சூரியன்
எங்கள் வானில் ஒளி வீசும்
காலைகள் வரவேண்டும்.


சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே
சிந்தனை உருவாகின்றது.

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சகல விடயங்களுக்கும்
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.

ஆசிரியர் குழு, Editors,
சிந்தனை SINTHANAI
ஒல்கா ஸ்ராஸா, 49 Olga str 49,
7 ஸ்ருட்காட் 1, 7-Stuttgart 1.
மேற்கு ஜேர்மனி. West Germany.

www.tamilarangam.net

# தோட்டத் தொழிலாளர்கள்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் முதுகெலும்பான மலையகத் தோட்டத்தொழிலாளரின் எதிர்காலம் குறித்து இதுவரை யாவும் இருபறி நிலைமைகளாகவே இருந்து வந்துள்ளன. ஏறத்தாழ நூற்றியெண்பது வருடங்களாக சோகத்தின் சுமைகளோடு வாழ்க்கையை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் முதல் தோன்றிய தொழிலாளர் வர்க்கமான இவர்கள் இன்னமும் கூட வாழ்க்கையின் அடிப்படைத்தேவைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய தொழில் வாய்ப்புக்களின்றியும், வெறும் கூலிகளாக, நவீன அடிமைகளாக வாழ்க்கையுடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

## ஆரம்ப வரலாறு

இலங்கையில் கோப்பிப்பயிர்ச்செய்கை 1820களில் ஆரம்பமானதிலிருந்து மலையகத்தில் இவர்கள் வாழ்க்கையும் ஆரம்பமானது. பிரிட்டிஷ்காரர்களுக்கு பெருந்தோட்ட உற்பத்திக்கு உள்ளூர் ஆட்கள் வேலை செய்ய முன்வராததால் தென்னிந்தியாவிலிருந்து வஞ்சகமான முறையில் ஆசைகாட்டி இவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். தென்னிந்தியாவிலிருந்து இராமேஸ்வரம் , பின்னர் தலைமன்னாரிலிருந்து கண்டி வரையும் நடந்தே வந்தார்கள். மலையகத்தின் பெருந்தோட்டங்களிலான லைன் அறைகளில் வசதிகள் எதுவுமற்ற நிலையில் கைதிகள் போல வாழ்ந்தனர். பாமரர்களான இவர்களுக்கு தோட்ட நிர்வாகம் மருத்துவ வசதிகள் குறைவான நிலையிலும், கல்வியறிவு முற்றாக மறுக்கப்பட்ட நிலையிலும் வெறும் கொத்தடிமைகளாகவே வைத்திருந்தது. ஊரமக்களுடன் எதுவித தொடர்பும் இவர்களுக்கு ஏற்படுத்தப்படவில்லை. ஒரு தோட்டத்திலிருந்து இன்னொரு தோட்டத்திற்கு சென்றாலோ, அல்லது தோட்டத்தை விட்டு தப்பியோடினாலோ கசையடி தண்டனையாக கிடைத்தது.

இந்த நிலையில் தங்கள் உரிமைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய முறையில் ஒரு போராட்டத்தை தோட்ட நிர்வாகத்திற்கெதிராக இவர்களால் நடாத்தமுடியவில்லை. இவர்களிடத்து ஒரு தொழிற்சங்கமோ, அல்லது ஒரு அரசியல் கட்சியோ உருவாகாதவிடத்து தோட்ட

www.tamilarangam.net

நிர்வாகத்தின் கெடுபிடிகள் இருந்தன. அத்துமீறல் சட்டச்சட்டம் வெளியாட்கள் தோட்டங்களுக்குள் சென்று அரசியல் பணிகள் செய்யவோ அல்லது சமூக சேவைகள் செய்யவோ இடமளிக்கவில்லை. ஆனால் 1935 களில் லங்கா சமசமாஜக்கட்சி தனது தொழிற்சங்கமான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தை பதிவு செய்து தோட்டப் பகுதிகளில் போராட்டங்களையும், வேலை நிறுத்தங்களையும் நடாத்தியது. இதே காலகட்டத்தில் முல்லோயாத் தோட்டத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் கோவிந்தன் என்னும் தொழிலாளி பொலிசாரால் சுடப்பட்டு பலியானார்.

<u>வாக்குரிமை பறிப்பு</u>

இலங்கையின் அரசாங்கத்துறையில் தொழில் வகித்த இந்தியர்களுக்கும் இந்திய வர்த்தகர்களுக்கும் எதிராக சிங்கள பூர்சுவாக்களால் இந்திய எதிர்ப்பு வாதம் கிளப்பப்பட்டது. இது பின்னர் மலையகமக்களுக்கும் எதிராக திசை திருப்பப்பட்டது. 1947 இல் நடந்த முதலாவது தேர்தலில் மலையக மக்களின் வாக்குகளால் மலையகத்தின் 7பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் இடதுசாரிகள் பல தொகுதிகளில் வெற்றி பெறுவதற்கு இவர்களது வாக்குகள் உதவி புரிந்தன. இதைக்கண்டு அச்சமுற்ற சிங்கள பூர்சுவாக்கள் மலையக மக்களது வாக்குரிமையை பறிப்பதற்கு கங்கணம்கட்டினார்கள். இதன் வெளிப்பாடுதான் 1948ம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்காவினால் பிரசா உரிமைச்சட்டம் கொண்டு வரப்பட்டு இவர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டது இதன்பின் இவர்கள் இலங்கை அரசியலிருந்து ஒதுக்கப்பட்டு அநாதையாக்கப்பட்டார்கள். சில நாடுகளில் குறிப்பிட்டகாலம் வாழ்ந்தாலோ அல்லது அம்மண்ணில் பிறக்கும் வெளிநாட்டவரின் குழந்தைகளுக்கோ, அல்லது அம்மண்ணில் ஆணையோ பெண்ணையோ திருமணம் செய்தால் பிரசா உரிமை கிடைத்து விடுகிறது. ஆனால் மூன்று தலைமுறையாக வாழ்ந்த இம்மக்களுக்கு, இலங்கையின் பொருளாதாரத்தில் 80 வீதத்தை தங்கள் கைகளில் வைத்திருந்த இவர்களுக்கு, இவர்களது பிரசாஉரிமையை பறித்ததன் மூலம் தனது நன்றிக்கடனை டி.எஸ்.சேனநாயக்காவின் அரசு காட்டியது. இலங்கையின் அரசியலில் ஜனநாயகத்தை இதன்மூலம் சிங்கள இனவாதிகள் குழிதோண்டி புதைத்து விட்டனர்.

இந்த கொடுஞ்சட்டத்தை அற்ப மந்திரி பதவிக்கு ஆசைப்பட்டு ஜீ.ஜீ.பொன்னம்பலமும் அவரது சகாக்களும் ஆதரித்து பாராளுமன்றத்தில் பேசியதின் மூலம் இம்மக்களுக்கு துரோகமிழைத்தனர். இதனைக்காரணம் காட்டி தமிழ்காங்கிரசிலிருந்து வெளியேறிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தமிழரசுக்கட்சியை உருவாக்கினும் இம்மக்களோடு இணைந்து போராட்டம் எதையும் நடாத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்வரவில்லை: பாராளுமன்ற அரசியலுக்குள் சென்று விட்ட இடது
சாரிகள் இதனை எதிர்த்து பாராளுமன்றத்தில் பேசியதோடு நின்றுவிட்
டார்கள். இம்மக்களிடையே பலமிக்கதாக விளங்கிய இலங்கை தொழி
லாளர் காங்கிரஸ் ஒருநாள் போராட்டத்துடன் மௌனமாகிவிட்டது.
இதன் பின்னர் இம்மக்கள் அரசியலில் ஊமையாகி விட்டார்கள்.

1950 களுக்குப்பின்

னல் இலங்கை இந்திய காங்கிரஸ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
என தொண்டமான் தலைமையில் மாற்றப்பட்டு இம்மக்களிடையே மிகப்
பெரிய தொழிற்சங்கமாக வளர்ந்து வந்தது. இம்மக்களின் பாமரத்
தன்மையை தனக்கு சாதகமாகக் கொண்டதுடன் இம்மக்களிடையே சுய
மாக வெடித்தெழும் போராட்டங்களை கைப்பற்றி தான் செய்ததாக
வெளியுலகிற்கு காட்டிக் கொண்டது.

## நாடற்றவர் பிரச்சினை பற்றிய ஒப்பந்தம்.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின் மலையகமக்களை இந்தியாவிற்கு
நாடு கடத்துவதற்கு பேச்சுவார்த்தைகளை இலங்கை அரசு இந்தியரசு
டன் நடாத்த தொடங்கியது. 1953 இல் நேரு டட்லி பேச்சுவார்
த்தையும், 1954 இல் லண்டனில் நேரு கொத்தலாவை பேச்சுவார்த்
தையும் நடைபெற்றன. இவை யாவும் எதுவித உடன்பாட்டிற்கும் வரா
ததால் 1964 இல் ஒக்டோபர் 30 இல் மலையகமக்களின் வாழ்க்
கையை அடியோடு சீரழிக்கும் முகமாக சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம்
நடைபெற்றது. இதன்படி 9,75,000 பேரில் (பிரசா உரிமை அற்ற
மலையக மக்களின் தொகை) 5,25,000 பேருக்கு 15 வருடகால
த்தில் இந்திய பிரசா உரிமை வழங்குவதென்றும், அதே காலத்தில் 3,00
000 பேருக்கு இலங்கை பிரசா உரிமை வழங்குவதென்றும், எஞ்சியுள்ள
1,50,000 பேரினை பற்றி 1974 இல் தீர்மானிப்பதென்றும் முடிவு
செய்யப்பட்டது.

இதன்பிரகாரம் 1974 இல் சிறிமா இந்திரா ஒப்பந்தப்படி 75,000
வீதம் இரு நாடுகளும் மலையகமக்களை பங்கு போட்டுக் கொண்டன.
இந்த மக்களின் கருத்தை கேட்காமல் இந்த ஒப்பந்தம் இரு அரசுக
ளாலும் ஏற்படுத்தப்பட்டது. இதனை எதிர்த்து வேலை நிறுத்தங்களும்
போராட்டங்களும் தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டன.
சுதந்திரக்கட்சியில் நியமன எம்பியாக இருந்த தொண்டமான் தனது
பதவியில் இருந்தாரே ஒழிய பதவியை ராஜினாமாச் செய்து இதற்கெதி
ராக இம்மக்களைக் கொண்டு பாரியளவு போராட்டத்தை நடாத்த
வில்லை. கண்டன அறிக்கைகளுடன் தனது கடமையை முடித்ததுடன் பிர
சா உரிமைக்கு விண்ணப்பிக்கும்படி சகல மக்களையும் கேட்டுக் கொண்
டார். இடதுசாரிகள் அப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் கூட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேர்ந்து இருந்ததால் இவ்வொப்பந்தந்திற்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் பேசினர்.

இவ்வொப்பந்தத்தை எதிர்க்கும் சக்தியை இழந்த இம்மக்கள் அரசினால் நாடு கடத்தப்பட்டனர். இந்தியாவிற்கு போய்ச் சேர்ந்த இம்மக்களுக்கு நாயினும் கீழான வாழ்க்கைதான் கிடைத்தது. தோட்டத்தொழிலை தவிர வேறு எதுவும் தெரியாத இம்மக்கள் படும் கஷ்டங்கள் எண்ணிலடங்கா. சரியான வதிவிடம் இல்லாது, ஒருவேளை உணவிற்காக போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

## தேசியமயமாக்கலும் அடக்குமுறையும்.

மலையகத் தமிழ் பாடசாலைகளை இன ஒதுக்கல் நடவடிக்கை மூலம் சிங்களப்பாடசாலைகளாக சுதந்திரக்கட்சி அரசாங்கம் மாற்றியமைத்தது. பிரசா உரிமை அற்ற காரணத்தினால் பல மலையக மாணவர்கள் கல்வியை இழந்தார்கள். பெருந்தோட்டங்களை தேசியமயமாக்கல் என்கிற அடிப்படையில் காணிச்சீர்திருத்தச்சட்டம் 1972 இல் கொண்டு வரப்பட்டது. இதன்மூலம் 80,000 ஏக்கர் தேயிலைத் தோட்டங்கள் சிங்களமயப்படுத்தப்பட்டன. மலையகமக்கள் சுவிகரிக்கப்பட்ட காணிகளிலிருந்து அனாதைகளாக அடித்துக் கலைக்கப்பட்டனர். பயங்கரக்காடுகளாக இருந்த இந்தக் காணிகளை தோட்டங்களாக உருவாக்கிய இம்மக்களை அடித்து விரட்டி சம்பந்தமில்லாத சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதே கால கட்டத்தில் சங்குவாரி டெல்டா தோட்டங்கள் சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்க முயற்சியெடுக்கப்பட்டன இதன்போது டெவன் தோட்டத்தை சிங்களவர்களுக் பகிர்ந்தளிக்க முயற்சி செய்தபோது சிவனு லட்சுமணன் என்கிற தொழிலாளி கருத்தையினால் பொலிசாரினால் சுடப்பட்டு பலியானார். இதற்கெதிராக மலையகம் முழுவதும் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. வழக்கம் போலவே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இப்போராட்டங்களை தனதாக்கி அரசியல் லாபம் தேடியது.

## தொண்டமானும் அவரது துரோகமும்.

மலையக மக்களின் தனித்தலைவராக இன்றுவரை இருந்துவரும் தொண்டமான் இம்மக்களின் பாமரத்தன்மையை தனக்கு சாதகமாக பயன்படுத்தியபடி இவர்களது சுயமான போராட்டங்களை அரசிற்கு காட்டிக் கொடுத்து வந்துள்ளார். 1964களில் சுதந்திரக்கட்சியில் நியமன எம்பியாக இருந்த போதுதான் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தமும், கட்டாய நாடு கடத்தலும், தேசிய மயப்படுத்தல் எனும் போர்வையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலையக மக்கள் காணிகளிலிருந்து விரட்டியடிப்பும் நடைபெற்றது. தனக்குப்பின்னால் அணிதிரண்ட ஆறு லட்சம் மலையகத்தொழிலாளர்களை உருப்படியான ஒரு போராட்டத்திற்கு அணி திரட்டாது, வேலைநிறுத்தம் கர்த்தால் என்றும் பின்னர் அரசுடன் சமரசப்பேச்சுவார்த்தையென்றும் இம்மக்களது போராட்டங்கள் இவரால் மடுங்கவைக்கப்பட்டன. 1977 ற்கு பின் யூ.என் பியுடன் கூட்டு சேர்ந்தபின் இவரது சந்தர்ப்பவாதம் வெளிப்பட்டது. இவ்வரசாங்கத்தை காப்பாற்றுவதையே தனது நோக்கமாக கொண்டார். இவரது விசுவாசத்திற்கு பரிசாக கிடைத்த மந்திரிப்பதவியை ஏற்றுக்கொண்டபின் முழுத்தொழிலாள வர்க்கமும் போராட்டங்களில் வெற்றி பெறாத நிலையை ஏற்படுத்திவிட்டார்.

இவர் அரசாங்கத்தில் சேர்ந்ததினால் மலையக மக்கள் ஒரு சில நன்மைகளைத்தான் பெற்றார்கள். ஆனால் யூ.என்பி பெற்ற நன்மைகள் ஏராளம். 1981 இல் கங்காவத்தை, பிறவுன்லோ தோட்டங்களைச் சேர்ந்த 37 லயன் அறைகள் சிங்களக்குண்டர்களால் தகர்த்தெறியப்பட்டு, தொழிலாளர்கள் தாக்கப்பட்ட போதும், 1980 இல் ஆகஸ்டில் நடைபெற்ற பொது வேலைநிறுத்தத்தின்போது 40 ஆயிரம் தொழிலாளர்கள் அரசாங்கத்தினால் வீதியில் நிறுத்தப்பட்ட போதும், 83ல் நடைபெற்ற கலவரத்தில் நூற்றுக்கணக்கான மலையக மக்கள் கொலை செய்யப்பட்டபோதும் இவர் பார்த்துக் கொண்டுதானே இருந்தார். இவ்வரசாங்கத்திற்கெதிராக இம்மக்கள் கிளர்ந்தெழுந்த போதெல்லாம் இவரது முயற்சியால் இவையாவும் தடுத்து நிறுத்தப்பட்டன. வெறும் கண்டன அறிக்கைகளும் மகஜர்களும் இவரால் விடப்பட்டனவே ஒழிய தனது மந்திரிப் பதவியை ராஜினாமாச் செய்து இம்மக்களுக்காக ஒரு உருப்படியான தீர்வுக்கான போராட்டத்தை நடாத்த முன்வரவில்லை. இன்றும் கூட தனது சமரசமான பேச்சுக்கள் மூலம் இம்மக்களை ஏமாற்றி வருகிறார். அத்துடன் இம்மக்களின் விழிப்புணர்வு அதிகரித்து வருவதையிட்டு தனது தலைமையை காப்பாற்றிக் கொள்ள முயன்று வருகிறார்.

## தற்போதைய நிலை

இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டிய ஆறுலட்சம் பேரில் முதலில் நாலுலட்சம் பேர் விண்ணப்பித்தனர். பின் இனக்கலவரங்களால் 506,000 பேர் வரை விண்ணப்பித்தனர். மிகுதியாக இருந்தவர்களின் நிலை தீர்க்கப்படாமலே இருந்தது. ஈழப்போராட்டம் மலையகமக்களையும் உள்ளடக்கிய போராட்டமாக அமையவேண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டும் என ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்எப் போன்ற இயக்கங்கள் அர
சியல் வேலைத்திட்டத்தை முன்வைத்து வேலைசெய்யத் தொடங்கிய
தால் ஏற்பட்ட தாக்கமும், விழிப்புணர்வும், யு.என்.பியின் வாக்குக
ள் இம்மக்களிடையே சிதறாமல் இருக்கவும் தொடர்ந்து பூர்சுவா
தலைமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் அரசானது 1987
இல் 94000 பேருக்குக் குடியுரிமை வழங்க முன்வந்தது. இதன்
பின் கடந்த வருட இறுதியில் புதிதாக நிறைவேற்றப்பட்ட பிரஜா
உரிமைச் சட்டத்தின் படி இந்திய பிரஜாஉரிமைக்கு
விண்ணப்பித்தவ
ர்கள், இந்தியக் கடவைச்சீட்டு வைத்திருப்பவர்கள் தவிர்ந்த ஏனை
ய அனைவரும் இலங்கைப் பிராஜாஉரிமைக்குத் தகுதியானவர்கள்
எனவும் இவர்கள் பிராஜாஉரிமைக்கு விண்ணப்பிக்கலாமெனவும் அர
சாங்கம் தீர்மானம் நிறைவேற்றியது.

கடந்த நாற்பத்தியொரு வருடங்களாக தமது வாக்குரிமைக்காக
போராடி வாழ்க்கையில் ஏனைய மக்களைவிட பெரும் துன்பங்க
ளையும், துயரங்களையும் அனுபவித்தவர்கள். எதிர்காலம் இருட்டாக
இருந்த இவர்கள் வாழ்க்கையில் இன்று சிறு ஒளி ஏற்பட்டுள்ளது.
இந்தப் பிரஜாஉரிமை வழங்கப்பட்டதற்குப் பலகாரணங்கள் கற்பி
க்கப்பட்டாலும் இம்மக்களின் இடைவிடாத போராட்டங்களும் தியா
கங்களும் நாற்பத்தியொரு வருடங்களின் பின் இழந்ததமது உரிமை
யை மீண்டும் பெற வைத்திருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைப்
பயன்படுத்தி தமது ஏனைய உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும்
தமது விருப்பப்படி பாராளுமன்ற அரசியல் தலைவர்களைத் தெரி
வுசெய்யவும், தமது எதிர்காலத்தை சரியான வழியில் நிர்ணயிக்கும்
உரிமைபெற்றவர்களாகிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுவரை காலமும் இவர்களது அறியாமையையும் பிராஜா உரிமை இல்லாமையையும் தமக்குச்சாதகமாக பயன்படுத்தி அரசியல் இலாபம் தேடிக்கொண்டிருந்த மலையக அரசியல் பூர்சுவாக்கள் இனி பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இவர்களை உள்ளடக்காது நடைபெறும் எந்தவித போராட்டமும் வெற்றிபெறப் போவதில்லை என்பதுடன் இவர்களை இணைத்து போராடுவதன் மூலம் ஏனைய ம மக்களின் போராட்டமும் வெற்றி பெறும் என்பதே உண்மையாகும் புதியபலத்தோடு தமது மண்ணில் தங்கள் தடயங்களைப்பதிக்கும் இவர்களின் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது என்பதை இவ ர்கள் எந்தத் தலைமையின் கீழ் அணிதிரளப்போகிறார்கள் என்பதை பொறுத்து அமையும்.

—ஜி. கங்காதரன்.


# Sinthanai

Estd: 1985 1/89

All comunications shall be addressed to:

Editors,
SINTHANAI
Olga str.49,
7000Stuttgart1
West Germany




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழகத் தேர்தல்

தமிழக சட்டசபை ஜனாதிபதியினால் ஒரு வருடத்திற்கு முன் கலைக்கப்பட்டபின், சென்ற ஜனவரி 21ம் திகதி தமிழகப் பொதுத்தேர்தல் நடந்தேறியுள்ளது. இது தேர்தல் காலப்பரபரப்புக்களை மட்டும் தந்ததுடன் முடிவடைந்து விட்டது. இத் தேர்தலில் நான்கு முக்கிய அணிகள் போட்டியிட்டன.

தி.மு.க. தலைமையிலான அணியில், கம்யூனிஸ்ட் கட்சி(மாக்) ஜனதா தள், லத்தீப் தலைமையிலான முஸ்லீம் லீக் ஆகியனவும், இந்திரா காங்கிரஸ் தலைமையிலான அணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், அம்பேத்கார் மக்கள் இயக்கம் கிறிஸ்தவ ஜனநாயக முன்னணி, ஆர்.பி.ஐயின் ஓர் பிரிவு, பார்வாட்டு பிளாக்கின் ஓர் பிரிவும் கூட்டமைத்தன. ஜானகி தலைமையிலான அணியில் சிவாஜியின் தமிழக முன்னேற்ற முன்னணி, விவசாயிகள் மற்றும் உழைப்பாளர் சங்கம், ஆண்டித்தேவர் தலைமையிலான பார்வாட்டு பிளாக்கும், ஜெயலலிதா தலைமையிலான அணியில் விஜயராகவன் தலைமையிலான ஜனதா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் பிரிவு ஆர்.பி.ஐ யின் மற்றைய பிரிவு, விவசாயிகள் சங்கம் ஆகியன சேர்ந்து போட்டியிட்டன.

இத் தேர்தலில் நான்கு அணிகளும் தாராளமாக வாக்குறுதிகளை அள்ளி வீசின. அவ்வாக்குறுதிகளில் ஒரு பகுதியையாவது ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்ற முடியுமா என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அதே நேரத்தில் பணமும் தாராளமாக அள்ளி வீசி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு அணியும் மற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கு எந்த விதத்திலும் சோடை போகாமல் பார்த்துக்கொண்டன. ராஜீவ்காந்தி தமிழகத்தின் மேல் மோகம் கொண்டு அடிக்கடி தமிழக கிராமங்களை எல்லாம் தரிசித்தார். அதற்கேற்றாக கருணாநிதியும் தேசியமுன்னணியின் தலைவர்களையெல்லாம் தமிழகத்திற்கு இறக்குமதி செய்து சந்திக்கு காட்டிக்கொண்டிருந்தார். இத்தேசிய முன்னணி அமைக்கப்பட்டவிதமே அனாதியானது. அதனை தி.மு.க உயர்மட்டத் தொண்டர்களே பத்திரிகைகளைப்பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டிய நிலை. "எங்கள் கட்சி எம்.பி க்களைக்கூட ராஜீவ்காந்தி பாராளுமன்றத்தில் அழைத்துப்பேசுகிறார் என்னை அழைத்தால் வருவேனே" என்று பேசிவிட்டு அது நடைபெறமுடியாமல் போனதால் இரவோடிரவாக ஆரம்பிக்கப்பட்டதே இத்தேசியமுன்னணி. எந்தவிதமான கொள்கையடிப்படையிலும் அமையாமல் எதிர்க்கட்சி முதல்வர்களையும் "அரசியல்நாயகன்" வி.பி.சிங்கையும் , வைத்து ஆரம்பிக்கப்பட்டதே. இந்திவெறியர்களும், தமிழ் வெறியர்களும், அரசியல் வாழ்க்கை தண்டிக்கப்பட்டவர்களுமாக அமைக்கப்பட்ட இம்முன்னணி தமிழக தேர்தல் நேரம் உருவாகியபடியால் இரட்டிப்பு இலாபம் கருணாநிதிக்கே. தேர்தலில் நகர்ப்புறங்களில் "நேர்மையானவன்" என்ற சான்றிதழ் வி.பி.சிங்கை அழைப்பதாலும், எம்.ஜி.ஆரின் பின் கவர்ச்சியைக்காட்டி பாமரமக்களை அதிரட்ட என்.டீ.ராமராவையும் பாவித்தபடியால் தேர்தலில் தற்கால வெற்றி கிடைத்துள்ளது. ஆனால் அவருடைய கடந்தகால

ஊழல்கள் மறந்தோ, மறைந்தோவிடவில்லை. சக்கரைப்பேர ஊழலில் சுப்பிறீம்கோட் நீதிபதி சர்க்காரியாவின் விசாரணையில் இன்னதேதியில் இவ்வளவு பணம் இவரும் இவரைச்சார்ந்தவர்களும் வாங்கினர்கள் என்பது இன்னும் அறிக்கையாக கிடப்பிலேயே கிடக்கிறது. இனி

www.tamilarangam.net

றிலிருந்த தமிழ்வதென்றால், தன்பதவியைத்தக்க வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் மத்திய அரசின் காலுக்குள் கிடப்பதைத்தவிர மாற்று வழியில்லை.

தமிழகத்தில் எம்.ஜி.ஆர் கவர்ச்சிக்குக் கீழ் இருந்தவர்களை ஜானகி அணியினரும், ஜெயலலிதா அணியினரும் பங்கு போட்டுக் கொண்டதாலும், அமைப்புகளில் இருந்து இந்தி எதிர்ப்பு, மாநில சுயாட்சி, தமிழ்ப்பற்று என்று கத்திக்கத்தி உணர்மைபூர்வமாக அல்லாமல் உணர்ச்சிபூர்வமாக தொண்டர்களை தங்கவைத்துக்கொண்டிருந்தமையாலும், கடந்தகாலங்களில் இந்திராகாங்கிரஸ் தனது கட்சியைக் கட்டிக்கொள்வதில் அக்கறை கொள்ளாமல் தி.மு.க, அ.தி.மு.க மேல் சவாரி செய்து வந்தமையாலும், இலங்கைப்பிரச்சனையில் நீலிக் கண்ணீர் வடித்தமையாலும் பத்து ஆண்டுகளின் பின்னர் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு தி.மு.க தலைமையின் கீழ் தமிழகமக்கள் ஆட்சியை ஒப்படைத்துள்ளார்கள். எது எப்படியாயிருப்பினும், இந்தியாவில் வேலையில்லாத மக்களை அதிகம் கொண்டிருக்கும் முதல் மூன்று மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்பதும், தென்னிந்தியாவில் வறுமைக்கோட்டிற்குள் வாழும் மக்களை அதிகம் கொண்டிருக்கும் மாநிலங்களில் தமிழகம் முதன்மை வகிக்கின்றது என்பதுடன் இந்தியாவின் தொழில்உற்பத்தித்துறையில் நான்காவதாகவிருந்த தமிழகம் பதின்மூன்றாவதாக மாறியிருக்கின்றது என்பதும் கடந்தகாலங்களின் திராவிடர் கழகங்களால் கிடைத்த வரப்பிரசாதம். தான் பதவிக்கு வந்த நாள் இதனைத்தீர்ப்பேன் என்று கருணாநிதி கூறியுள்ளார். இப்பதவியில் இருக்கும் போது மத்திய அரசு தடுக்கின்றது என்று குறை கூறுவதோடு [illegible] [illegible] செய்வார்.

இக்கட்டுரை தி.மு.க வை மட்டும் சாடியிருக்கின்றபடியால் மற்றைய அணிகள் இதற்கு விதிவிலக்கு என்பதல்ல

(தொடர்ச்சி 37ம் பக்கம் பார்க்க)

www.tamilarangam.net

# அகிலம்

## மாஸ்கோ நீதிமன்றத்தின் தீர்ப்பும் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியகுழு தீர்மானமும்

*1930,40,50 களில் ஸ்டாலினால் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகள் அல்ல என அறிவிப்பு*

உலகவரலாற்றில் திருப்புமுனையாக அமைந்த தொழிலாள வர்க்கத்தின் முதலாவது புரட்சி நடந்தேறிய சோவியத் ருசியாவின் சரித்திரத்தில் கறைபடிந்த அத்தியாயங்கள் என் வர்ணிக்கப்படும் ஸ்டாலினுடைய ஆட்சிகாலத்தில் நடைபெற்ற பிரசித்திபெற்ற "மொஸ்கோ வழக்குகளில்" அளிக்கப்பட்ட தீர்ப்புகளையெல்லாம் ருசிய உயர்நீதிமன்றங்கள் செல்லுபடியாகாதவை ஆக்கியதுடன் அதில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்கள் சகலரும் நிரபராதிகள் எனவும் தீர்மானித்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருசியப்புரட்சியை லெனினுடன் வழிநடத்தியதுடன் செம்படையைக்கட்டியெழுப்பிய லியோன் ரொட்ஸ்கியுடன் பல முன்னணி பொல்சிவிக்கட்சியினருக் கெதிராக பொய்க்குற்றச சாட்டுக்கள் சுமத்தி வழக்குகள் தொடரப்பட்டது. சித்திர வதைகள் மூலம் பெறப்பட்ட ஒப்புகல் வாக்கு மூலங்களின் அடிப்படையில் அவர்களுக்கு மரணதண்டனைகள் விதிக்கப்பட்டன. பலர் நாடுகடத்தப்பட்டனர். சிலரை ஸ்டாலினுடைய ஏஜன்டுகள் பின்தொடர்ந்து படுகொலைசெய்தார்கள். தோழர் லியோன் ரொட்ஸ்கி இவ்வாறு 1940 ஆகஸ்ட் மாதம் படுகொலை செய்யப்பட்டார்.

புரட்சிகர மார்க்சிய வாதிகள் 50 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வழக்குகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று சர்வதேசரீதியாக எடுத்த முயற்சிகள் இன்று பயனளித்துள்ளது.

1956ம் ஆண்டு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரசில் இந்த வழக்குகள் மறுபரிசீலனை செய்யப்படுமென உறுதியளிக்கப்பட்டது. இதன்பின் இன்று ஏற்பட்டுவரும் மாற்றங்களுடன் மறைத்துவைத்த உண்மைகள் எல்லாம் வெளிக்கொணடுவரப்படுகின்றன. திரித்தும் பொய்யாகவும் எழுதப்பட்ட வரலாறுகள் திருத்தப்படுகின்றன.

சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியின் மத்தியகுழு, 1930, 1940 1950 களில் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி

(தொடர்ச்சி 37ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நான்காவது அகிலத்தின் 50வது ஆண்டு விழா.

---

உலகம் பரந்தமுறையில் மக்களின் உழைப்பைச் சுரண்டும் முதலாளித்துவ சமுதாய அமைப்புமுறையை மாற்றியமைப்பதற்காக உலகப்பாட்டாளிமக்களை ஒன்றுசேர்ப்பதற்காக அகிலரீதியில் சகலதொழிலாளவர்க்கக் கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்காக முதலாவது அகிலத்தை தோழர் கார்ல் மார்க்ஸ் உருவாக்கினார். ஐரோப்பியப்புரட்சிகளின் பின்னடைவுகளால் முதலாவது அகிலம் கலைக்கப்பட்டபின் தோழர் ஏங்கல்ஸ் இரண்டாவது அகிலத்தை உருவாக்கினார். இதில் அன்றைய சமூகஜனநாயகக்கட்சிகள் அங்கம் வகித்தன. முதலாவது உலகப்போரின் ஆரம்பத்தில் சமூகஜனநாயகக் கட்சிகள் தேசியவாதத்திற்கு அடிபணிந்ததால் இரண்டாவது அகிலக்கூட்டும் சீரழிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருசியப்புரட்சியின் பின் தோழர்கள் லெனினும் லியோன் ரொட்ஸ்கியும் மூன்றாவது அகிலத்தை உருவாக்கினார்கள். ஸ்டாலினின் ஆட்சிகாலத்தில் மூன்றாவது அகிலக்கட்சிகள் ஸ்டாலினின் ஊதுகுழல்களாகச் செயற்படுத்தப்பட்டதன் பின் மேற்குவல்லரசு நண்பர்களின் வேண்டுகோள்களுக்கிணங்க ஸ்டாலினால் கலைக்கப்பட்டது.-

தோழர் லியோன் ரொட்ஸ்கி 1938ம் ஆண்டு நான்காவது அகிலத்தை உருவாக்கினார். உண்மையான பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய சோசலிச ஜனநாயகத்தையும் சுபீட்சமான வாழ்க்கைமுறைகளையும் சீரழிந்த குட்டிமுதலாளித்துவ தனிநபர்வழிபாடுகளையும், தனிக்கட்சி ஆட்சிமுறைகளையும் உட்கட்சிஜனநாயகமின்மையையும் "கம்யூனிசம்" என்று அறிமுகப்படுத்திய சீரழிந்த மூன்றாவது அகிலக்கட்சிகளுக்குப் பிரதியீடாகவே புரட்சிகர மார்க்சியத்தத்துவத்தினடிப்படையில் நான்காவது அகிலம் உருவாக்கப்பட்டது.

கடந்த காலங்களில் திரித்துக்கூறப்பட்ட வரலாறுகளும், படுகொலைகளாலும் சேறடிப்புக்களாலும் மறைக்கப்பட்ட உண்மைகளும் இன்று உலக மக்கள் முன்னிலையில் நிரூபணமாகிக் கொண்டு வருகின்ற இந்த வேளையில் நான்காவது அகிலம் தனது 50 ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

www.tamilarangam.net

1988 மே மாதத்தில் டென்மார்க்கில் முதலாவது கொண்டாட்ட விழா ஆரம்பமாகியது. நான்காவது அகிலத்தின் ஐக்கிய செயலகத்தின் தலைவர்களில் ஒருவரான எனரஸ்ட் மன்டேல், பேருநாட்டின் விவசாயிகள் பேரணியின் தலைவர் கியுகோ பலங்கோ ஆகியோருடன் இன்னும் பல சர்வதேச தோழர்கள் உரையாற்றினார்கள். இனவெறிக்கெதிரான சர்வதேச நிகழ்ச்சியில் தோழர் ராறிக் அலி உரையாற்றினர். மாற்றைய விழாக்கள் ஜேர்மனி, பெல்ஜியம், இத்தாலி, ஸ்பெயின் முதலிய ஐரோப்பிய நாடுகளிலும் மெக்சிக்கோ. அமெரிக்கா, லத்தின் அமெரிக்கநாடுகளிலும் ஆசியாக் கிளை கிளைகளிலும் கொண்டாடப்பட்டன.

இறுதி நிகழ்ச்சிகள் நான்காவது அகிலத்தின் ஐக்கிய செயலகத்தின் மத்தியபீடம் அமைந்திருக்கும் பாரீஸ் நகரில் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் மெக்சிக்கோவில் அமைந்திருக்கும் லியோன் ரொட்ஸ்கி நூதனசாலையின் பொறுப்பாளராகக் கடமையாற்றும் தோழர் லியோன் ரொட்ஸ்கியின் பேரனை எஸ்டபென் வொல்கோ உரையாற்றினார்.

எந்தக் கோட்பாடுகளுக்கமைய நான்காவது அகிலம் உருவாக்கப்பட்டதோ அவையெல்லாம் சர்வதேசரீதியாக நிரூபணமாகிக்கொண்டுவருவதே இந்த இயக்கம் பெற்றுவரும் புரட்சிகர வெற்றிகளாகும்.

கே. பி. ராஜ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்ணிருந்தும் குருடர்களாய்...

எமது தேசத்தின் பொருளாதார நிலைமைகளினாலும் நாட்டின் அமைதியின்மை காரணமாகவும் அதிகமான மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டது. குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி அதிகம் பாதிக்கப்பட்டது. ஆரம்பத்திலிருந்து வடக்குமாகாணத்தில் தரப்படுத்தலால் குறைந்தளவு மாணவர்களுக்கே பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்புக் கிடைத்தது. இலங்கையில் பட்டப்படிப்பே உயர்வானதாகக் கருதப்படுகின்றது. பதிலாக வேறு எந்தக்கல்விமுறையும் எமது நாட்டில் இல்லை. தொழில் நுட்பக்கல்வி நிலையங்களில் சென்று படிப்பதற்கு அதிகளவு பணம் தேவைப்படுகின்றது. தரப்படுத்தல் காரணமாக சில வடபகுதி மாணவர்கள் வவுனியா, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்குச் சென்று பரீட்சை எழுதினார்கள். சில மாணவர்கள் தமக்காக வேறு சிலரை அனுப்பி பரீட்சை எழுதுவித்தனர். 'குதிரையோட்டம்' என்ற சொல் வழக்கத்திற்கு வந்தது. இப்படியான சில மாணவர்களின் சுயநலப்போக்கினால் அதிகமான மாணவர்களின் கல்வியினை பாதிப்படைந்தது. யாழ்ப்பாணத்தில் அதிகளவு 'டியூசன்கள்' ஆரம்பித்தன. பரீட்சைக்கு முன்பாக நேர்மையற்ற முறையில் வினாத்தாள்களை திருடியும் வெளியிட்டும் தமது வருமானத்தை

www.tamilarangam.net

தைத் தேடிக்கொண்டனர். தமது 'டியூசன்' நிலையங்களின் விளம்பரத்திற்காக அதிகளவு பணம் செலவளித்து எல்லாச் சுவர்களிலும், சிலைகளிலும் பெரிய கண்ணைக்கவரும் சினிமா விளம்பரங்கள் போன்ற வர்ணவிளம்பரங்களால் நிரப்பினர். இந்த ஈர்ப்பினால் பல மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் 'டியூசன்'களுக்குச் சென்றனர். பாடசாலைக்குச் செல்வதன் மூலம் மாணவர்கள் ஒழுக்கம், பண்பாடு என்பனவற்றைக் கற்கின்றனர். இவற்றை ஒரு டியூசனில் கற்க முடியாது. சில பாடசாலை ஆசிரியர்களும் இந்த டியூசன் மாயையில் மயங்கினர். தமது 'டியூசனு'க்கு வரும் மாணவர்களுக்கே கூடிய கவனம் செலுத்தினர். இதனால் சில ஆசிரியர்கள் பள்ளிக்கூட வகுப்புகளில் அதிகம் படிப்பிக்கவில்லை. மாணவர்களும் தாம் 'டியூசனில்' படிக்கலாமென வகுப்பில் பாடத்தில் அதிக கவனம் செலுத்துவதில்லை. காலப்போக்கில் மாணவர்கள் ஆசிரியர்களின் பெயரைக் கேட்டால் ' 'டியூசன்' ஆசிரியரின் பெயரைச் சொல்லத் தொடங்கினர்கள். 'டியூசனு'க்குச் செல்வது ஒரு சமூக அந்தஸ்தாகவும் கருதப்பட்டது. எந்தப்பள்ளிக்கூடம் நல்லது எனக் கேட்பதற்குப் பதிலாக எந்த 'டியூசன்' நல்லது எனஆராயத் தொடங்கினர். மாணவர்களின் தரத்தை ஆசிரியர்கள் கணிக்கும் காலம் போய் 'டியூசன்' ஆசிரியர்களில் எவர் சிறந்தவர் என மாணவர்கள் தரம் பிரிக்கும் காலம் ஏற்பட்டது. இதனால் பாடசாலைகளுக்கு மட்டும் சென்றுபடிக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாணவர்களின் கல்வியும் மனோநிலையும் பாதிக்கப்பட்டது.

எமது நாட்டின் வேலைவாய்ப்பின்மை காரணமாக இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் வழக்கம் ஏற்பட்டது. பணமுள்ளவர்களும் காணிகள் உள்ளவர்களும் ஐரோப்பிய நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் செல்ல ஆரம்பித்தனர். சமூகத்தில் படித்தவர்களை விட வெளிநாடு சென்றவர்களுக்குக் கூடிய மதிப்பு உருவாகியது. இதனால் பல மாணவர்கள் தாம் படித்தும் என்ன செய்வதென மனமுடைந்தனர். சில பெற்றோர்களின் நச்சரிப்புக்களால் மாணவர்கள் படிப்பை இடையில் நிறுத்தி வெளிநாடுகளுக்குச் சென்றனர். படித்துத்தான் என்ன செய்வது என்ற வார்த்தைகளால் பல மாணவர்களுக்கு வருங்காலம் நம்பிக்கையற்றதாகக் காணப்பட்டது. சாதாரண பரீட்சையில் சித்தியடையாதவர்கள் மாற்றுக் கல்விமுறையில்லாததால் வேறு வழிகளில் தமது நேரத்தை வீணாக்கினர். இப்படியாக மாணவர்களின் கல்வி பாதிப்படைந்தது.

பாராளுமன்ற கட்சித்தலைமைகளினாலும், ஈழப்போராளிக்குழுக்களினாலும் கர்த்தால்கள் நடத்தப்பட்டன. மாணவர்கள் பயத்தில் பாடசாலைகளுக்குச் செல்லமுடியவில்லை. நாட்டின் நிலைமை காரணமாக போக்குவரத்துச் சேவைகள் ஒழு ஒழுங்காக நடைபெறாததால் பாடசாலைகளுக்குத் தூரத்திலிருந்த மாணவர்கள் வகுப்புகளுக்குச் சமூகமளிக்க முடியவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வில்லை. போராட்டம் உக்கிரமடைந்த பொழுது பல பாடசாலை மாணவர்கள் போராளிக்குழுக்களில் சேர்ந்து கொண்டனர். சில போராளிக்குழுக்கள் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை நிறுத்துவதைதான் தமது போராட்டமென நினைத்தனர். க.பொ.த. சாதாரணப்பரீட்சைகள் சில போராளிக் குழுக்களால் குழப்பப்பட்டன. மாணவர்களின் விடைத்தாள்கள் கிழிக்கப்பட்டு, பாடசாலைத்தளபாடங்கள் சேதமாக்கப்பட்டன. பல மாணவர்கள் குழப்ப வந்தவர்களின் கால்களில் விழுந்து இவ்வாறு செய்யவேண்டாமென்று கேட்டனர். இதனால் வடபகுதியில் பரீட்சைகளைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. பின்பு வடபகுதியில் மட்டும் நடைபெற்ற பரீட்சைகள் கடினமாக அமைக்கப்பட்டன. சில பரீட்சைகளில் சில குழப்பவாதிகள் பரீட்சை நடை நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது விடைகளைச் செ சொல்லிக் கொடுத்தனர். அவர்கள் பெரும்பாலும் தவறான விடைகளையே சொல்லிக் கொடுத்தனர். இதனால் பல மாணவர்கள் அமைதியாக இருந்து பரீட்சை எழுத முடியவில்லை இந்த செயல்களைக் காரணம் காட்டி தென்பகுதி இனவாதிகள் வடக்கு கிழக்குப் பகுதி மாணவர்கள் நேர்மையான முறையில் பரீட்சையில் சித்தியடைவதில்லை என்று பிராசச சாரத்தை நடத்தினர்.

பின்பு ஏற்பட்ட அரசபயங்கரவாதத்திலும், இராணுவத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ள் அடாவடித்தனங்களிலும் பல பாடசாலை மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு பல சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டனர். இதனால் சில மத்தியதரவர்க்கத்தினர் தமது பிள்ளைகளை இந்தியாவுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு அனுப்பினர். சிலர் கொழும்பிற்குச் சென்றனர். தொடர்ந்து நடைபெற்ற இராணுவத்தாக்குதல்களிலும் சூட்டுவெடிப்புச்சம்பவங்களிலும் மாணவர்களுக்கு வீட்டிலோ அல்லது பாடசாலையிலோ ஒழுங்காகப் படிக்க முடியவில்லை. பாடசாலைகளை ஒழுங்காக நடத்த முடியவில்லை. பெற்றோர்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பப் பயப்பட்டனர். அதிகமான மாணவர்கள் அகதிகளாக அகதிமுகாம்களில் வாழ்ந்தனர். பாடசாலைகள் அகதிமுகாம்களாக அல்லது இராணுவமுகாம்களாக மாற்றப்பட்டன. இராணுவத் தாக்குதல்களால் வீடுகள் சேதமாக்கப்பட்டதால் பல மாணவர்கள் உயிரிழந்தனர். புத்தகங்கள் அசியவை எரிந்தன. இதனால் பல மாணவர்கள் பரீட்சை எழுத முடியவில்லை. இராணுவத்தினாலோ அல்லது அராஜககுழுக்களினாலோ குடும்பங்கத்தவர்கள் கொல்லப்பட்ட பொழுது மாணவர்கள் மனோநிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. சில அராஜகவாதிகளினால் பல்கலைக்கழகமாணவர்கள் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டனர். இந்தச் செயல்களினால் மாணவர்கள் பயந்து வாழவேண்டிய நிலையில் தமது எதிர்காலத்தில் நம்பிக்கை

www.tamilarangam.net

யற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

எமது கல்விமுறை முதலாளித்துவக் கல்விமுறைதான், அது மாற்றியமைக்கப்பட வேண்டுமே தவிர சீர்குலைக்கப்படக் கூடாது. எமது நாட்டின் கல்விமுறை புனரமைப்புச் செய்யப்படவேண்டும். எந்தவொரு புனரமைப்புப்பணியும் அமைதியான சூழ்நிலையிலேயே செய்யப்பட முடியும். இதில் கவனம் செலுத்தாமல் விட்டால் ஒரு கல்வியறிவற்ற சந்ததியே நமது நாட்டில் உருவாகும்.

-உமா

---

தமிழகத் தேர்தல் (26ம் பக்கத்தொடர்ச்சி)

கட்டுரையில் ஏற்கனவே கூறியுள்ளபடி மற்றைய அணிகளும் இதற்கு சோடைபோகவில்லை. ஆனால் இன்றைக் கூட்டணியில் இருப்பதுவால் அதனை ஆராயவேண்டுமென்பதற்காகவே இக்கட்டுரை.

-எஸ். எஸ். ராசன்

---

மொஸ்கோ நீதிமன்றத்தின் தீர்ப்பும்...

(28ம் பக்கத்தொடர்ச்சி)

கிடைக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஸ்டாலினின் உட்கட்சிஜனநாயக சீரழிவினால் உயிரிழந்தவர்களின் பெயர்களிலிருந்து கறைகள் நீக்கப்பட்டுவிட்டன. நமது நாட்டில் உட்கட்சிஜனநாயகத்தின் சீரழிவினால் உயிரிழந்தவர்கள் பற்றிய பகிரங்க விசாரணைகளை நடத்துவது எப்போது என்றுதான் இன்னும் தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

சிந்தனை ஆசிரியர்குழுவிற்கு,

மேற்குஜேர்மனியில் முன்னர் வெளியான "எண்ணம்" சஞ்சிகை நிறுத்தப்பட்டதன் பின் "சிந்தனை" வெளிவந்தது. "எண்ணம்" சஞ்சிகையின் ஆசிரியர் சிந்தனைக்குழுவிலும் அங்கம் வகிக்கிறார். "சிந்தனை", "எண்ணம்" சஞ்சிகையின் தொடர்ச்சியா?

கே. பரராஜா – ஸ்ருட்காட், மேற்கு ஜேர்மனி.

( "சிந்தனை" 'எண்ணம்' பத்திரிகையின் தொடர்ச்சியல்ல. அதோடு "சிந்தனை"க்கு எந்தவிதமான தொடர்பும் கிடையாது. 'எண்ணம்' குழுவிலிருந்த சிலர் "சிந்தனை" ஆசிரியர்குழுவில் "சிந்தனை"யின் ஜனநாயகமத்தியத்துவக் கோட்பாட்டுக்களுக்கு அமைய அங்கம்வகிக்கின்றார்கள்.

'எண்ணம்' பத்திரிகையுடனோ அல்லது 'எண்ணம் வெளியீடு' என வெளியிடப்பட்ட பிரசுரங்களுடனோ "சிந்தனை" ஆசிரியர்குழுவிற்கு எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்பதைத் தெரிவிக்கின்றோம்.

– ஆசிரியர்குழு )

ஆசிரியர்குழுவிற்கு,

ஆடிமாதம் நீங்கள் பிரசுரித்த எனது கடிதத்தில் தரவுகளின்றி நான் குறிப்பிட்ட சிலவிடயங்களுக்கு நான் மன்னிப்புக் கோருகின்றேன்.

ஆர். சிவானந்தன் –ஸ்ருட்காட், மே. ஜே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்தனை ஆசிரியர் குழுவினருக்கு, வணக்கம்.

தங்களின் செப்–ஒக்டோபர் இதழைப்படித்தேன். பக்கம் 31, பந்தி 1இல் "வெறும் அதிதீவிர இடதுசாரித்தனமான கோஷங்களை சகல கட்டுரைகளுக்கும் (பிரச்சனைகளுக்கும்) தீர்வாக இறுதியில் எழுவது சுலபம். அதை விடுத்து, மக்கள் மத்தியில் இன்று செயற் படுத்தப்படவேண்டிய இடைக்கால வேலைத்திட்டங்களுக்கான பிரச் சாரங்களை மேற்கொள்ளுவதுதான் அர்த்தமான அரசியல் என நாம் நம்புகின்றோம்" என்று 'புதுமை'ப் பத்திரிகைக்கு அளித்த பதிலில் கூறியிருந்தீர்கள்.

இது வாறுவியல் மெய்ப்பாட்டு இயல்புடன் ஒத்தகருத்து. அதில் சந்தேகமேயில்லை. "சிந்தனை"யின் கருத்தை நான் என்ன, எல்லா யதார்த்த சிந்தனைவாதிகளும் ஏற்பார்கள். உங்கள் பணி தொடரட்டும். என் வாழ்த்துக்கள்.

ப . வி. சிறிரங்கன் – நூறன்பேர்க், மேற்கு ஜேர்மனி.

சிந்தனை ஆசிரியர்குழுவினருக்கு,

ஆடி மாத 'சிந்தனை' அடியேன் கைகளுக்கு வந்தது. அட்டைப்படம் ஒரு சிந்தனை தந்தது. கவி என்று ஒரு 'அடி' எழுதிவிட்டேன். உள்ளம் உண்டானால் மறுவெளியீட்டில் இவ்வடிகளைப்பார்த்திடுவேன்.

ரி. மாணிக்கரூஸ் – ஸ்ருட்காட், மேற்கு ஜேர்மனி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓட்டைப்படம் தந்த அடிப்பு.



Sinthanai 2/88 ஆடி July 1988

பரிதவிக்கிறாள் பரிதவிக்கிறாள்
பாவை அவள் பரிதவிக்கிறாள்
பலமான தவம் கிடந்து
பத்துமாதம் சுமந்தெடுத்த
பச்சைப்பிஞ்சைக் கையிலேந்தி
பரிதவிக்கிறாள் பாவை அவள்.

பாசிசம் தந்தொருபாடம்
பாருக்குக்கற்றிடடா தம்பி
பாரினில் சுதந்திரம் வந்திட
பாமரரை சுரண்டி வாழும்
பச்சோந்திகளை விரட்டிடவே
பாரதி பாடினன் அன்று.

தனியொருவனுக்குணவில்லையெனில்
அழித்திடுவோம்ஜெகத்தினை என்றான்
சுரண்டிடும் பாவிகளை நாமும்
பாரினின்றும் விரட்டிடுவோம் தம்பி
நீதிகள் தூங்கிடாது காப்போம்
மனுநீதிசோழன் ஆட்சி காண்போம்.

ரி. மாணிக்கருன் - ஸருட்காட், மே. ஜே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

NEW TIMES

A SOVIET WEEKLY OF WORLD AFFAIRS

Cyprus: the president's headaches

LAW

# Restoring the good names of Stalin's purge victims

**Cancellation of decisions of illegal "troikas" (three-man tribunals) and "special assizes" will facilitate the process of rehabilitation**

*Pavel Volobuyev,*
Corresponding Member
of the U.S.S.R. Academy of Sciences

Mass-scale Stalinist repressions of the 1930s, 1940s and 1950s remain an unhealing wound on the historical memory of the Soviet people. The more we learn about the repressions, the more staggered we are not only by the magnitude of this war against the people, but also by the arbitrary rule, lawlessness and devaluation of human life. The scythe of Stalinist repressions did not spare any, even the smallest, ethnic group, any stratum or section of society. The cream of science was being eliminated deliberately, with sadistic, infernal regularity... Who, now or even after many years, can estimate, at least roughly, the consequences of this for the social, economic and spiritual progress? Who can say how much we could have achieved but for Stalin's crimes against the Soviet people?...

On the initiative of the CPSU Central Committee much has been done recently to rehabilitate innocent victims of the Stalin's dictatorship. A new powerful impetus has been given to the process of rehabilitation started by the 20th Congress of the Party and slyly halted by the architects of the stagnation period – may their names be disgraced in history for that! Dozens and hundreds of names of slandered and forgotten leaders of the Communist Party and the Soviet state, active participants and heroes of the October Revolution and civil war, builders of socialism have been returned from oblivion. This became possible thanks to the cancellation of the sentences given at the ill-famed Moscow trials of 1936-38 (when the courts merely went through the motions of a normal legal procedure) and those of the innumerable clandestine trials of different "anti-Party" groups and blocs. We also learn from the press about the work which is being done to rehabilitate the most numerous victims of the repressions – ordinary workers, peasants and intellectuals.

Several days ago the CPSU Central Committee passed a decree "On additional measures for restoring justice as regards the victims of the repressions of the 1930s, 1940s and early 1950s." The Presidium of the U.S.S.R. Supreme Soviet is obliged to cancel by a single act all decisions taken by the illegal "troikas" and "special assizes" thus rehabilitating all the victims of repressions.

We do not speak exclusively of the victims of the frame-up trials and intimidations any more. We are speaking of people who were deprived even of biassed trials and who were illegally eliminated. We must restore the historical and legal justice as regards these people of whom there were hundreds of thousands... Given the magnitude of repressions that took place under Stalin's bloody dictatorship, the conventional rehabilitation procedure would have dragged on for several decades. But our disturbed conscience, the conscience of generations once deceived by Stalin, the duty to expiate our guilt before the innocent victims, and the constructive tasks of today dictate the necessity of a speedier rehabilitation of the repressed.

My own reminiscences convince me in the fact that the Central Committee's decree is both timely and justified. In 1938 I happened to be a witness of a purge of Komsomol activists in the Semiozerny region of Northern Kazakhstan. I entered the Komsomol in May 1937 and was elected secretary of the school committee and member of a regional committee of the Komsomol. I remember how the Komsomol activists were summoned for an extraordinary meeting in the late summer or early autumn of 1938. The meeting was attended by 150 or 200 activists, the most distinguished Komsomol members of the 1930s: secretaries of Komsomol committees in collective and state farms, machine and tractor stations, front-ranking collective farmers, builders, teachers, Komsomol functionaries. Unlike the previous – lively, energetic and businesslike – meetings, this one was a kind of collective psychosis, mass insanity. It must be noted that even before the meeting some Komsomol functionaries labeled "enemies of the people" started disappearing one by one. During the two days of the meeting the speakers (first from a higher committee, then local ones) railed against the "enemies of the people" who as they claimed were there in the hall, against local nationalists and fascist spies (Komsomol activists of the Kazakh and German descent respectively). A boy of fifteen I was sitting there dumbfounded...

By the end of the meeting hardly one third of the participants remained in the hall. Others were exposed as "enemies of the people" or confessed their relations with them (for instance, they drank tea together or were friends)... After some days they disappeared and there is no doubt that these best Komsomol members of Northern Kazakhstan fell prey to the "troikas" and "special assizes." Even then was it difficult to believe that these fine young guys were enemies of the people. As most of the people of my generation, I used to believe that there occurred a terrible but amendable mistake. Naturally I couldn't know at that time who was to blame for it. After 1956 I met only some activists exposed at that meeting. They survived by miracle and they deserve credit for not having renounced their principles. Many Komsomol activists repressed in 1938 after the Great Patriotic War lost all their relatives and there was no one to salvage their good names.

After the war I studied at the Moscow University and saw bright students, former soldiers among them, disappear (in 1949-52 the victims were mostly Jews). Thus bloody repressions followed Stalin to his grave.

The Central Committee's decree is especially necessary, in my opinion, because today simple rehabilitation of the victims of Stalinism is insufficient. The decree calls on us – the present generation of the Soviet people and our posterity – to pay tribute to their memory. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்தனை இதழ்களைத் தொடர்ச்சியாகப் பெறுவதற்கு நீங்கள் செலுத்த வேண்டிய அன்பளிப்பு 20 டி. எம். மட்டுமேயாகும்.

